1978 செப்டம்பர் 2]

கொடுப்பார்களா என்று பார்த்துக் கொண்டு இருப்பது சரியா? தமிழகத்திலே உள்ள தொழிலாளர்களுக்கும் உடனடியாக அரசே மின்விளக்குகளைப் போட்டுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல இந்த ஆண்டு இறுதிக்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்த வால்பாறை பகுதியிலே இருப்பதைப்போல் பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் நெல்லை மாவட்டத்தில் மாஞ்சோலை எஸ்டேட்டிலே இருக்கிறது, அங்கே ஏற்கனவே இருக்கிற காலனிகள், லைன்களில் மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மின்கட்டண பில் நிர்வாகத்தின் பெயருக்கு அனுப்பப்படுகிறது. எவ்வளவு பணம் கட்ட வேண்டுமென்று குடியிருக்கிறவர்களுக்குத் தெரியாது. மின்சாரம் பயன்படுத்துகின்ற ஒவ்வொருவருக்குமே தனித்தனியாக பில்லை கொடுத்தால் முறையாக இருக்கும், ஆகவே அந்த முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாக கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தரலாம், தக்க நடவடிக்கை எடுப்பது பற்றியும் பரிசீலனை செய்யலாம்.

வாலாஜா நகரத்திற்குப் புதை சாக்கடை அமைத்தல்

* வினா எண் 50—**திரு. துரை முருகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டம், வாலாஜா நகரத்திற்கு புதை சாக்கடை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். வாலாஜா மிகப் பழமையான நகரம். தமிழ்நாட்டிலே முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட நகராட்சி அது. அங்கே கொசுத் தொல்லை தமிழ்நாட்டிலே உள்ள இடங்களிலேயே மிக அதிகமாக இருக்கிறது. அதன் காரணத்தால் யானைக்கால் வியாதி போன்றவை ஏற்படுகின்றது. சற்றேறப்ப 1 லட்சத்திற்கு மக்கள் வாழ்கிற நகரம். ஆகவே, அந்த நகராட்சியிலே புதை சாக்கடைத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அந்த நகராட்சியிலேயிருந்து நிதிகொடுத்து பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான செலவை ஏற்றுக் கொண்டால் குடிநீர் வடிகால் வாரியம் அதைப் பரிசீலிக்கும்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, அது வருவாய் இல்லாத நகராட்சி. தமிழ்நாட்டிலே நம்பர் 1 முனிசிபாலிடியாக தோற்றுவிக்கப்பட்ட முதல் முனிசிபாலிட்டி அது தான். காலப்போக்கிலே அதனுடைய வருவாய் குன்றி விட்டது. நசிந்து போய்விட்ட பஞ்சாலைகளை எப்படி அரசே ஏற்றுக்கொண்டு உதவி செய்ய முன்வருகிறதோ அதைப்போன்று நசிந்துவிட்ட அந்த நகராட்சிக்கும் அரசே உதவி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய கொள்கை நகராட்சி, மேஜர் பஞ்சாயத்துக்கள் போன்றவையாக இருந்தாலும் சரி, குடிநீர் கொடுப்பது, அல்லது சாக்கடைத் திட்டம் அமைப்பது இவைகளைக் கொண்டு வருவதாக இருந்தால் அந்தச் செலவை ஏற்றுக்கொள்கிறோம் என்று அவர்கள் தீர்மானம் போட்டு நிறைவேற்றி அனுப்ப வேண்டும். அந்தச் செலவில் மூன்றில் இரண்டு பங்கை எல்.ஐ.சி.யும் மூன்றில் 1 பங்கை அரசும் கொடுத்துவிட்டு, அதற்கான ஆய்வு சார்ஜை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு செய்து கொடுத்து விட்டு திட்டத் தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

1978 செப்டம்பர் 2]

(முற்பகல் 9-30)

முப்பதாண்டுக் காலத்தில் நாங்கள் திரும்பக் கொடுத்து விடுகிறோம் என்று உறுதி மொழி பத்திரம் மூலமாகக் கொடுத்தால் நிச்சயமாக இந்த அரசு முடித்து விட்டு மெதுவாக முப்பதாண்டுக் காலத்தில் பெற்றுக்கொள்ளும்.

கல்வராயன் மலைப்பகுதியிலுள்ள நிலங்கள் விற்பனை

*வினா எண் 51—திரு. துரை முத்துசாமி: மாண்மிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலைவாழ் மக்களிடமிருந்து வெளியார் (மலை ஜாதியார் அல்லாதார்) வாங்கிய நிலங்கள் செல்லாது என சட்டம் இயற்றும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) ஆம்.

(ஆ) மாநில அளவில், பழங்குடியினர் தம் நிலத்தை மற்றவர்களுக்கு மாற்றம் செய்வதைத் தடுக்கச் சட்டம் கொண்டு வருவது பற்றி அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் அரசாங்கத்தின் மூலமாகப் பல ரோடுகளைப் போட்டிருக்கிறார்கள். அதன் விளைவாக அங்குள்ள விவசாயிகளுடைய நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. ரோடுகள் போட்டு இரண்டாண்டுகளாகியும் அவர்களுக்கு இன்னும் நஷ்டயீடு கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்படுமா, எப்பொழுது கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கேள்வி, நில மாற்றத்தைத் தடுக்கப் புதிய சட்டம் கொண்டு வருவது பற்றியது. நஷ்டயீட்டைப் பற்றியது அல்ல. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்கிறேன்.